**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.65/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | சுகன்யா |
| Father's /Husband Name | : | சிலம்பரசன் |
| Village | : | எண்கண் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 33 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day of July 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது எண்கண் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது தெருவைச் சேர்ந்தவர். எனது கணவர் சிலம்பரசன் 108 ஆம்புலன்ஸில் டிரைவராக பணியாற்றி வருகிறார். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள். ஆஜர் எதிரி என்னை பார்த்து நான் குண்டாக இருக்கிறேன் என்று என்னை கேலி செய்தது என்னுடைய கணவரிடம் நான் கூறினேன். எனது கணவர் ஆஜர் எதிரியை அழைத்து கண்டித்தார். கடந்த 13.06.2024 ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் எண்கண் கீழக்காலணிக்கு நான் வேலை பார்த்த சம்பள பணம் வாங்குவதற்காக சென்றேன். அந்த தெருவிலும் எங்களுக்கு காலணி வீடு மற்றும் கூரை போட்டு அதில் இந்திராணி என்பவர் குடியிருந்து வருகிறார். அந்த வீட்டின் கூரை பிச்சி கிடந்ததால் அந்த வீட்டில் குடியிருக்கும் இந்திராணியிடம் நான் கேட்டேன். அவர் என்னிடம் கார்த்தி என்பவர் தான் கூரையை பிச்சார் என்று என்னிடம் கூறினார். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி நான்தான்டி தேவடியா குச்சிகாரி பிச்சேன் என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவ்வாறு ஆஜர் எதிரி என்னை திட்டியதால் அவமானம்

ஏற்பட்டது. ஆஜர் எதிரி கையால் எனது கன்னத்தில் அறைந்தார். என்னை தாக்கி என்னுடைய புடவையை உருவினார். எல்லோரும் நிற்கும்போது எனது புடவையை அவர் உருவியதால் எனக்கு அசிங்கமும், அவமானமும் ஏற்பட்டது. உன்னால் என்ன செய்ய முடியும் என்று மிரட்டிவிட்டு போனார். அதனால் எனக்கு இன்று வரைபயமாக உள்ளது. இது சம்மந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி குடவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் நான் சொன்னதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் கொடுத்த அன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். மீண்டும் நான்கு நாட்கள் கழித்து என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனக்கு எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒரு காலி மனையும் இரண்டு வீடுகளும் உள்ளது. புதிதாக கட்டிய வீட்டில் 2023 ஏப்ரல் மாதத்திலிருந்து குடியிருந்து வருகிறேன். அந்த வீட்டின் முகவரி என்னவென்றால் எண்கண் மேலக்காலணி ஆகும். நான் புதிதாக குடியிருக்கும் வீட்டிற்கும் இந்திராணி கணேசன் குடியிருக்கும் வீட்டிற்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் 11/2 கி.மீ இருக்கும். நான் கொடுத்த புகாரில் எண்கண் கீழக்காலணியில் குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். முகவரி மாற்றம் செய்யப்படாததால் அந்த முகவரியை குறிப்பிட்டுள்ளேன். சம்பவம் நடந்த அன்று கீழக்காலணி வீட்டில் இந்திராணி கணேசன் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் எங்கு வேலை பார்த்து வருகிறார் என்றால் சென்னையில் வேலை பார்த்து வருகிறார். எனது கணவர் மாதம் ஒரு நாள் மட்டும் சென்னையிலிருந்து வருவார். இந்திராணி கணேசனுக்கும் ஆஜர் எதிரிக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக அடிக்கடி பிரச்சனை வரும் என்றால் இல்லை. இந்திராணி கணேசன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது நாத்தனாரின் சின்ன மாமியார் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 13.06.2024

கொடுத்தேன். அந்த புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன். நான் சொல்வது போல் இந்திராணி கணேசன் குடியிருக்கும் வீட்டில் கூரை உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்திராணி கணேசனுக்கும் இடம் பிரச்சனை சம்மந்தமாக கேட்க சென்ற போது ஏற்பட்ட பிரச்சனையை காரணமாக வைத்து எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என்னை திட்டவும் இல்லை தாக்கவும் இல்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பட்டியல் சாட்சியான இந்திராணி, மாலா, சுபலதா எனது உறவினர்கள் என்றால் சுபலதாவும் இந்திராணியும் எனது உறவினர்கள். மாலா எனது எதிர்வீட்டுக்காரர். காலணி வீட்டு முன்பு எந்த சம்மந்தமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.07.18 10:54:06 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`